BOOMI INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
An international open access, peer- reviewed, refereed journal

# பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கல்விச் சிந்தனைகள்
# Educational thoughts in the Eighteen Minor Works

**முனைவர் சொ. கோகில மீனா**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சக்தி மகளிர் கலை (ம) அறிவியல் கல்லூரி, ஒட்டன்சத்திரம், திண்டுக்கல் மாவட்டம்.

**Dr. S. Kohilameena**
Assistant Professor in Tamil, Sakthi College of Atrs and Science for Women, Oddachathiram.
Cell No-9095040184, Email: srimeena1986@gmail.com

**Abstract**

In the tradition of Tamil literature, the Pathinenkilkanakku collection stands as a significant literary compilation that emerged in the post-Sangam period. The eighteen works included in this collection expound upon ethical principles, social norms, and cultural values that guide human life. Among these, ideas concerning education hold a prominent place. The Pathinenkilkanakku texts consider education not merely as a tool for acquiring knowledge, but as a means of shaping individuals into complete and virtuous human beings. This article examines the educational philosophies expressed in these texts from an analytical perspective.

**Key words**: All learning is full of knowledge, the wealth of hearing, yet the unlearned listen, on the shore of education, the learned are ignorant, the cause of morality is education, the path of learning is standing.

**ஆய்வு சுருக்கம்**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலத்திற்குப் பிந்தைய அறநெறி இலக்கியங்களாக விளங்குபவை பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள். இந்நூல்கள் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் அறக் கருத்துகளை மட்டுமன்றி கல்வியின் அவசியம், அறிவின் பயன், கற்றலின் நெறி போன்ற பல கல்விச் சிந்தனைகளையும் எடுத்துரைக்கின்றன. குறிப்பாக திருக்குறள், நாலடியார், இனியவை நாற்பது, இன்னா நாற்பது போன்ற நூல்கள் கல்வியின் உயர்வை வலியுறுத்துகின்றன.

**குறிச் சொற்கள் :** கற்றனைத்து ஊறும் அறிவு, செவிச் செல்வம், கற்றிலன் ஆயினும் கேட்க,கல்வி கரையில், கற்றறிந்தார் கேண்மை, ஒழுக்கத்திற்கு காரணம் கல்வி, கற்றவழி நிற்றல்.

## முன்னுரை

தமிழ் இலக்கிய மரபில் சங்க காலத்திற்குப் பிந்தைய காலத்தில் தோன்றிய முக்கிய இலக்கியத் தொகுப்பாக **பதினெண்கீழ்க்கணக்கு** விளங்குகிறது. இத் தொகுப்பில் அடங்கிய , ,பதினெண்ட்டு நூல்களும் மனித வாழ்க்கையை நெறிப்படுத்தும் அறக் கருத்துகளையும், சமூக ஒழுக்கங்களையும், பண்பாட்டு விழுமியங்களையும் எடுத்துரைக்கின்றன. அவற்றுள் கல்வி குறித்த சிந்தனைகள் குறிப்பிட்த்தக்க இடத்தைப் பெறுகின்றன. கல்வி என்பது அறிவைப் பெறும் ஒரு கருவி மட்டுமல்ல; மனிதனை முழுமையான நற்பண்புடையவனாக உருவாக்கும் சாதனம் என பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் கருதுகின்றன. இக்கட்டுரை, அற நூல்களில் வெளிப்படும் **கல்விச் சிந்தனைகளை** ஆய்வுநோக்கில் ஆராய்கிறது.

திருக்குறளில் கல்வி, கல்லாமை என்னும் இரண்டு அதிகாரங்களில் கல்விச் சிந்தனைகள் வலியுறுத்தப் பட்டிருக்கின்றன. இவ்விரண்டு அதிகாரங்களும் பொருட்பாலில் அரசியல் என்னும் பகுப்பில் இடம் பெற்றிருக்கின்றன. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துவதற்காக அவர் கல்வி, கல்லாமை ஆகிய அதிகாரங்களைத் தொடர்ந்து கேள்வி என்னும் அதிகாரத்தையும் அமைத்துள்ளார். கற்க வேண்டிய நூல்களைப் பழுதறப் படிக்க வேண்டும் அவ்வாறு குற்றம் நீங்கப் படித்த பின்னர், படித்த நூல்களில் உள்ள கருத்துக்களின்படி வாழ்க்கையில் நடந்துகொள்ள வேண்டும் என்கிறார் வள்ளுவர்,

*"கற்க கசடறக் கற்பவை கற்றபின்*
*நிற்க அதற்குத் தக"* (குறள், 391)

புகழோடு இவ்வுலகில் வாழ விரும்பும் மக்களுக்கு அறிவியல் வழிபட்ட கல்வியும் (எண்ணும்), கலையியல் சார்ந்த கல்வியும் (எழுத்தும்) ஆகிய இரண்டும் இரண்டு கண்கள் என்கிறார்.

*"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்*
*கண்ணென்ப வாழும் உயிர்க்கு"* (குறள், 392)

கற்றவர்களே கண்ணுடையவர் என்று கருதப்படுவர் கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் என்று சொல்லப்படுவர் (குறள் 343) என்பதையும் வள்ளுவர் மறக்காமல் நினைவூட்டுகின்றார்.

**கற்றனைத்து ஊறும் அறிவு**

மண்ணைத் தோண்ட தோண்ட நீர் ஊறுவது போல. நூல்களைப் படிக்கப் படிக்க மக்களுக்குக் கல்வியறிவு வளரும் என்பதை,

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு*
*கற்றனைத் தூறும் அறிவு"* (குறள், 396)

என்கிறார் வள்ளுவர்.

**செவிச் செல்வம்**

செல்வத்துள் எல்லாம் சிறந்த செல்வம் காதால் கேட்டு அறிவைப் பெருக்கிக் கொள்ளும் செவிச் செல்வம் ஆகும் அச்செல்வமே செல்வங்கள் அனைத்திலும் மேலான செல்வமாகும் என்பதை,

*"செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்*
*செல்வத்து ளெல்லாந் தலை"* (குறள், 411)

என்ற குறளில் குறிப்பிடுகின்றார் வள்ளுவர்.

**கற்றிலன் ஆயினும் கேட்க**

ஒருவன் கற்க முடியாவிட்டாலும் பரவாயில்லை. அவன் கற்றறிந்தவர்களிடம் கேட்டாவது அறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும். அக்கேள்வியறிவு ஒருவனுக்குத் தளர்ச்சியும் துன்பமும் வந்த காலத்தில் பற்றுக்கோல் போல் நின்று பயனளிக்கும் என்கிறார் திருவள்ளுவர்,

*"கற்றில னாயினும் கேட்க அஃதொருவருக்கு*
*ஒற்கத்தின் ஊற்றாந் துணை"* (குறள், 414)

கல்லாதவன் கற்றவர்களிடமிருந்து பெருமையும், புகழையும், சிறப்பையும் தரும் நல்லவற்றையே கேட்க வேண்டும் என்பதைத் திருவள்ளுவர்,

*"எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும்*
*ஆன்ற பெருமை தரும்"* (குறள், 416)

என அழுத்தமாக வலியுறுத்திக் கூறுகிறார்.

**மம்மர் அறுக்கும் மருந்து**

கல்வி இவ்வுலக இன்பத்தைத் தரும் கற்றவர் புகழை உலகெங்கும் பரவச் செய்யும் கல்வியே அறியாமையைப் போக்கும் மருந்து என்பதை மற்றொரு நாலடியார் பாடல்.

*"எம்மை யுலகத்தும் யாம்காணோம் கல்விபோல்*
*மம்மர் அறுக்கும் மருந்து"*
(நாலடியார். கல்வி, பா.எண். 132)

எனக் குறிப்பிடுவது கருதத்தக்கதாகும். களர் நிலத்தில் தோன்றும் உப்பையும் சான்றோர் நல்ல நஞ்சை நிலத்தில் விளைந்த நெல்லைவிட மேன்மையாகக் கருதுவர். அதுபோல் கீழ்க்குடியில் பிறந்தவர்கள் ஆயினும் அவர்கள் நன்கு கற்றறிந்தவர்களாக இருந்தால் அவர்களையே மேலான குடியில் உயர்ந்த இடத்தில் வைத்து சான்றோர் போற்றுவர்.

*"கடைநிலத்தோ ராயினும் கற்றறிந் தோரைத்*
*தலைநிலத்து வைக்கப் படும்"*
(நாலடியார். கல்வி, பா. எண்.133)

ஆதலால் கல்வியால் உயர்குடிப் பிறப்புக்குரிய மதிப்பையும் பெறலாம் சாதிய ஏற்றத் தாழ்வுகளையும் ஒழிக்கலாம் என்னும் கருத்தும் இப்பாடலில் இடம் பெற்றிருப்பது நோக்கத்தக்கதாகும். ஒருவன் தன் மக்கட்குச் செல்வம் எனச் சேர்த்து வைக்கத்தக்கது கலவியே என்பதை,

"எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற"
(நாலடியார். கல்வி, பா.எண்.134)

என்னும் நாலடியார் பாடல் வரிகளால் அறிகின்றோம்.

**கல்வி கரையில்**

கற்பவருடைய வாழ்நாட்கள் சிலவே ஆகும். ஆனால் கல்வி முடிவற்றது. ஆதலால் நீரை நீக்கிப் பாலைப் பருகும் அன்னப் பறவையைப் போல அறிவுடையோர் நூலில் தன்மைகளை அறிந்து நல்ல நூல்களையே கற்க வேண்டும் என்பதைப் பின்வரும் நாலடியார் பாடல் உணர்த்துவது அறியத்தக்கதாகும்.

*"கல்வி கரையில் கற்பவர் நாற்சில்*
*மெல்ல நினைக்கின் பிணிபல தென்னிதின்*
*ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்*
*பாலுண் குருகின் தெரிந்து"*
(நாலடியார், கல்வி, பா.எண்.135)

**கற்றறிந்தார் கேண்மை**

கற்றறிந்தவர்களுடன் கொள்ளும் நட்பே நற்பண்புகளை வளர்க்கும். கற்றறிந்தவர்களுடன் நட்பு நுனியிலிருந்து கரும்பைத் தின்பதைப் போன்றது. அது கல்லாதவர்களுடன் கொள்ளும் நட்பு அடிப்பகுதியிலிருந்து கரும்பைத் தின்பதைக் போன்றது. அது தொடக்கத்தில் இனிப்பாக இருக்கும் பின்னர் தீமைகளையே மிகுவிக்கும் இதனை,

*"கனைகடல் தண்சேர்ப்ப கற்றறிந்தார் கேண்மை*
*நுனியின் கரும்புதின் றற்றே நுனிநீக்கித்*
*தூரின்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா*
*ஈரமி லாளர் தொடர்பு"*
(நாலடியார். கல்வி, பா. எண்.138)

கல்லாதவர்களுடன் கொள்ளும் தொடர்பு நட்பும், அன்பும் இல்லாததாக அமையும் என்னும் கருத்தை இப்பாடல் வலியுறுத்துவது எண்ணத்தக்கதாகும்.

**இளமையில் கற்க**

நாலடியார் மெய்ஞ்ஞான நூல்களைக் கற்க வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது. முன்னுறையனார் பழமொழி நானூறுப் பாடலில் கற்பதற்குரிய பருவம் இளமைப் பருவம் ஆதலால் இளமையில் கல் என்பதை சுரம் போக்கி உலகு கொண்டார் இல்லை. மரம் போக்கிக் கூலி கொண்டார் இல்லை என்னும் இரண்டு பழமொழிகளைச் சுட்டிக்காட்டி விளக்குகின்றார்.

*"_ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ ஆற்றச்*

*சுரம்போக்கி உலகு கொண்டார் இல்லை யில்லை*

*மரம்போக்கிக் கூலி கொண்டார்"*

*(பழமொழி நானூறு, பா.எண்.1)*

கற்பதற்குரிய இளம்பருவத்தில் கல்வியைக் கற்காதவன் முதுமையில் கற்று வல்லவன் ஆகமுடியாது என்னும் கருத்தை இப்பாடல் பேசுகின்றது.

**கற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு**

கல்வியின் சிறப்பைக் குறிப்பிட வந்த முன்றுறையனார் சுற்றவர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்கிறார். கற்க வேண்டிய நூல்களை நன்கு கற்றுத் தேர்ந்தவர்களே அறிவுடையோர் ஆவார். அவர்களுடைய புகழ் உலகம் முழுவதும் சென்று பரவும். ஆதலால் அனைத்து நாடுகளிலும் அவர்களுக்குச் சிறப்புக் கிடைக்கும் என்பதை ஆற்றுணர் வேண்டுவதில் என்னும் பழமொழியைச் சுட்டி விளக்குகின்றார்.

*"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்*

*நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு*

*வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்*

*ஆற்றுணர் வேண்டுவ தில்" (பழமொழி நானூறு, பா.எண்.4)*

**கற்றவர் கடமை**

நூல்களிலுள்ள சொற்களை ஆராய்ந்து நுட்பமான பொருள் விளக்கங்களை கண்டறிதலும், நூல்களில் கூறப்படாத பயன் இல்லாத சொற்களை மற்றவர் விரும்பிக் கேட்டாலும் கூறாமையும், உயிர்க்கு உறுதிபயக்கம் சொற்களை உயர்ந்தவரிடத்தில் மட்டுமே கூறலும் ஆகிய இம்மூன்றும் பல நூல்களையும் கற்றறிந்தவர் மேற்கொள்ள வேண்டிய கடமையாகும் என்பதை நல்லாதனார் திரிகடுகத்தில்,

*"நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்குஏலா*

*வெண்மொழி வேண்டினும் சொல்லாமை நன்மொழியைச்*

*சிற்றினம் அல்லார்கண் சொல்லும் இம்மூன்றும்*

*கற்றறிந்தார் பூண்ட கடன்" (திரிகடுகம், பா.எண். 32)*

எனக் குறிப்பிடுகின்றார்.

**ஒழுக்கத்திற்கு காரணம் கல்வி**

பெருவாயின் முள்ளியார் ஆசாரக்கோவையில் நன்றியறிதல், பொறையுடைமை, இன்சொல், எவ்வுயிர்க்கும் துன்பம் செய்யாமை, கல்வி, ஒப்புரவு, அறிவுடைமை, நல்லினத்தாரோடு நட்புக் கொள்ளல் ஆகிய எட்டினையும் ஒழுக்கத்திற்குக் காரணம் என்கிறார். எனினும் அவர் கல்வியோடு ஒப்புரவற்ற அறிதல் (ஆசாரக்கோவை, பா.எண்.1) எனக் குறிப்பிடுவதால் கல்வியும். ஒப்புரவு அறிதலும் உள்ளவர் ஒழுக்கத்தில் தவறமாட்டார் என்பது கருத்தாகும். குருவிற்குக் காணிக்கை செலுத்துதல், வேள்வியைச் செய்தல், தவம் செய்தல், கல்வியை முறைப்படக் கற்றல் என்ற நான்கினையும் சான்றோர் வாழ்வு நெறியாக ஆசாரக்கோவை குறிப்பிடுகின்றது.

*"தக்கணை கேள்வி தவம் கல்வி இந்நான்கும்*

*முப்பால் ஒழுக்கினாற் காத்துய்க்க"*

*(ஆசாரக்கோவை, பா.எண் 3)*

மனம், மொழி, மெய் என்ற மூன்றிலும் இந்நான்கினையும் கழித்துக் கொள்பவனே வாழ்வியல் நெறியை அறிந்து ஒழுகுபவன் ஆவான்.

**கற்றவழி நிற்றல்**

கபிலரின் இன்னா நாற்பது கல்விச் சிந்தனையை எதிர்மறையாக எடுத்துக் பேசுகின்றது. ஒருவன் எத்தகைய அறிவு நிறைந்த சான்றோனாக இருந்தாலும், அவன் கற்ற கல்வி வழி நிற்கா விட்டாலும் (அ) அவன் கற்ற கல்வியால் எந்தவொரு பயனும் இல்லாவிட்டாலும் அவன் கற்ற கல்வியும் அதற்கான காலமும் வீணாகும்.

*"அந்தணரில் விருந் தூணின்னா ஆங்கின்னா*

*மந்திரம் வாயா விடின்"*

*(இன்னா நாற்பது, பா.எண்.1:2-3)*

ஆதலால் கற்ற கல்வியின்படி ஒழுகாவிட்டாலும், கல்வியைக் கற்றவர்க்கு அக்கல்வியே பெருந்துன்பமாக அமையும் என்பதை இப்பாடலடிகளால் அறிகின்றோம். கல்லா உரைக்கும் கருமப் பொருளின்னா (இன்னா நாற்பது. பா. எண்.15:2) கலவியைக் கற்றவர்கள் அவையில், கல்லாதவர்கள் கூறும் காரியத்தின் பயனும், விளைவும் துன்பம் தரக்கூடியதாகவே அமையும். கற்றவர்கள் இல்லாத இடத்தில் அறிவுடைய கருத்துக்களையோ செயல்களையோ எடுத்துக் கூறுவதும், செய்யுள் இயற்றிக் கூறுவதும் பயனற்றதாகவே அமையும் பொருளுணர்வார் இவ் வழிப் பாட்டுரைத் தலின்னா (இன்னா நாற்பது,பா.எண்.10:1).

**கற்றார் சிறப்பும் கல்லாதவர் இழிவும்**

கல்வியைக் கற்றபின் பொன்னைப் பெறுவான் கவிஞன் மன்னனால் சிறப்பிக்கப்பட்டு அனைத்துப் பொருள்களையும் பெறுவான்.'வாதம் செய்ய வல்லவன் வென்றவன்' என்ற புகழைப் பெறுவான் ஆனால் கல்வியைக் கல்லாதவர்களும், கற்றவர் இனம் அல்லாதவர்களும் நல்லார் கூட்டத்தின் நடுவே எள்ளி நகையாடுபவர் என்பதையும் சிறுபஞ்சமூலம்,

*"பொன்பெறும் கற்றான் பொருள்பெறும் நற்கவி*

*எனப்பெறும் வாதி இசைபெறும்-முன்பெறக்*

*கல்லார் கற்றார் இனத்தரல்லார் பெறுபவே*

*நல்லார் இனத்து நகை"*

*(சிறுபஞ்சமூலம், பா.எண். 56)*

எனக் குறிப்பிடுகின்றது. இப்பாடலின் வாயிலாகக் கற்றார் சிறப்பும், கல்லாதார் பெறும் இழிவையும் அறிகின்றோம்.

**முடிவுரை**

திருக்குறளில் பொருட்பாலில் அரசியல் என்னும் பகுப்பில் கல்வி, கல்லாமை என்னும் இரண்டு அதிகாரங்களில் கல்வி சிந்தனைகள் வலியுறுத்தப் பெற்றுள்ளன. அதனை அடியொற்றிப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்தும் அழிவற்ற நிலையான செல்வம் கல்வியே, கற்றலின் ஆயினும் கேட்க, கற்றறிந்தார் சிறப்பு. கற்றது மறவாமை, கற்றவழி நிற்றல், கல்லாமையின் இழிவு. ஒழுக்கத்திற்கு கல்வியே காரணம் என்று எடுத்துரைத்தல் கற்றார் சிறப்பும், கல்லாதவர் இழிவும் என்ற நிலைகளில் கல்விச் சிந்தனைகளை எடுத்துரைக்கின்றன. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் வெளிப்படும் கல்விச் சிந்தனைகள், கல்வியை மனிதனை முழுமையாக்கும் சக்தியாகக் காட்டுகின்றன இந்நூல்கள் கல்வியை .vஅறிவு பெறும் வழியாக மட்டுமல்லாமல், அறம், ஒழுக்கம், சமூக பொறுப்பு ஆகியவற்றை வளர்க்கும் கருவியாகவும் காண்கின்றனஎனவே ., பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் தமிழ்சமூகத்தின் கல்வி சிந்தனைகளின் அடித்தளமாக விளங்குகின்றனஇக்கல்விச் சிந்தனைகள் இன்றைய . கல்வி முறையிலும் ப்பட வேண்டிய அவசியம் .இணைக்கஉள்ளது.

**துணை புரிந்த நூல்கள்**


1. இராசாராம்.துரை, டாக்டர்.,பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்(தெளிவுரை) முல்லை நிலையம், சென்னை, மறு பதிப்பு 2013.
2. சுப்பிரமணியன். ச.வே., தமிழ் அறநூல்கள் – ஓர் ஆய்வு, உலகத் தமிழராய்ச்சி நிறுவனம், சென்னை, 2010.
3. வரதராசன். டாக்டர் மு., தமிழ் இலக்கிய வரலாறு, சாகித்ய அகாடெமி, சென்னை, மறு பதிப்பு 2009.
4. வரதராசன். டாக்டர் மு., திருக்குறள் – கல்விச் சிந்தனைகள், சைவ சித்தாந்த நூற் பதிப்பு கழகம், 2014.



**Funding**

No funding was received for conducting this study.


**Conflict of interest**

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.